# ஜீலை 12 - புனித அருளப்பர் குவால்பெர்ட் (985-1075)

இவர் இளமையில் கிறிஸ்தவ கல்விப் பயிற்சி பெற்றார். என்றாலும் உலக வீண் பெருமைகளைத் தேடி வந்தார். இவருக்கு ஒரே ஒரு சகோதரன் உண்டு. அவருடைய பெயர் ஹியுகோ (ர்ரபழ). அவரை ஒருவன் கொன்றுவிட்டான். பழிவாங்க தீர்மானித்து, பெரிய வெள்ளிக்கிழமையன்று வேலைக்கரர்களுடன் ஜாண் வெளியே போனார். எல்லோரிடமும் ஆயுதங்கள் இருந்தது. அப்பொழுது அவருடைய சகோதரனைக் கொன்றவன் எதிரில் வந்தான். ஜாண் வாளை உருவி அவனைக் கொல்லப் போனார். உடனே கொலைக்காரன் முழந்தாளிட்டு மன்னிப்புக் கேட்டான். இயேசு சிலுவையில் தொங்கும்பொழுது சொன்ன சொற்கள் இவரது நினைவிற்கு வந்தன. எதிரியை மன்னித்து அவனை அரவணைத்தார். உடனே அருகில் இருந்த கோவிலுக்குச்சென்று சிலுவையில் அறைப்பட்ட இரட்சகரது சுருபத்தின் முன் முழந்தாளிட்டு செபித்தார். அவர் ஏறிட்டுப் பார்க்கும்பொழுது இரட்சகர் தம் பக்கமாய் தலை சாய்ப்பதைக் கண்டார். இதிலிருந்து இரட்சகரும் அந்த கொலைக்காரனை மன்னித்து விட்டார் என்றும் ஜாண் அறிந்துகொண்டார். மனதுருகி பின்னர் இவர் சந்நியாசி ஆனார். மடத்தின் தலைவர் பதவியை ஏற்க மறுத்தார். பல மடங்கசை சந்தித்த பின் ஒரு புதிய சபையைத் தொடங்கினார். இவர் தாழ்ச்சி மிகுந்தவர். எனவே குருப்பட்டம் வேண்டாம் என்று சொல்லி விட்டார். ஏழைகள் மீது இரக்கம் உள்ளவர். எந்த ஏழை வந்தாலும் அவனுக்கு ஏதாவது கொடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தார். அநேக சந்நியாசிகளை சீர்திருத்தினார். பணம் கொடுத்து பதவி பெறும் வழக்கத்தை அந்தப் பகுதியில் அறவே ஒழித்தார்.

**சிந்தனை:**

நமக்குத் தீமை செய்தவர்களையும் நாம் மன்னிக்க வேண்டும். இதற்கான பலத்தை சிலுவையில் தொங்கும் இயேசுவிடம் கேட்டு மன்றாடுவோம்.

**செபம்:**

ஆண்டவரே, மன்னித்து மறக்கும் வரத்தை எங்களுக்குத் தாரும்.



SAN GIOVANNI GUALBERTO
Fondatore dei Benedettini Vallombrosani
Celeste Patrono dei Forestali